Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 8 (09.07.2003) புதன்கிழமை இதழ்: 280

யாழ்.மக்களின் நன்மை கருதி

EXPO AVIATION

LION AIR

SERENDIB EXPRESS

யாழ். - கொழும்பு - யாழ்.

மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...

ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505

(சி-1096)

வேலணையில் பாடசாலை மைதானத்தினூடாகச் சென்ற

## படையினரின் மின்சார வேலியில் சிக்கினான் பத்துவயதுப் பாலகன்!



பாதிக்கப்பட்ட சிறுவன்

(யாழ்ப்பாணம்)

வேலணை - துறையூரில் பாடசாலைக்கு அருகில் முகாமிட்டிருந்த கடற்படையின் முகாமைச்சுற்றி போடப்பட்டிருந்த முட்கம்பிச் சுருளில் பாய்ச்சியிருந்த மின்சாரத்திற்கு, பத்து வயது மாணவன் ஒருவன் இலக்கானான்.

வேலணை தெற்கு ஐயனார் வித்தி யாலயத்தில், தரம் ஐந்தில் கல்வி கற்கும் அன்ரனி அஜந்தன் என்ற மாணவன் பாடசாலை நேரத்தில் - பாடசாலை மைதானத்திற்குள்ளாகச் சென்ற சமயம், அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வேலியில் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரம் தாக்கிக் காயமடைந்தான்.

மேற்படி பாடசாலை மைதானத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் விசா பெறுவதற்கு இனி கைரேகை பதியப்படும்

இலங்கையில் மட்டும் புதிய நடைமுறை அமுலாகிறது

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்கு விசா பெற்றுச்செல்ல விண்ணப்பிக்கும் எவருக்கும்- அவர்களது கைரேகைகள் பதியப்பட்ட பின்னரே விசா வழங்கமுடியுமென - பிரிட்டிஷ் அரசாங்கம் திடீர் அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

சட்டவிரோதமாக பிரிட்டனில் இலங்கையர்கள் குடியேறுவதையும், தஞ்சம் கோருவதையும் தடுக்கவே - இந்தப் புதியமுறை அமுல்படுத்தப்படுவதாக, பிரிட்டிஷ் அரசு கூறுகின்றது.

இலங்கையர்கள் பலர் விசா பெற்றுவிட்டு, பின்னர் நாட்டினுள் நுழைந்ததும் தமது ஆவணங்களை அழித்துவிட்டு, சட்டவிரோதமாகக் குடிறேிவருவதால் - அவ்வாறான முயற்சிகளைத் தடுப்பதற்கே இப்புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டிருப்பதாக, பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் பெவர்லி ஹியூக்ஸ் தெரிவித்தார்.

அண்மையில் பிரிட்டிஷ் அரசு மேற்கொண்ட முடிவின்படி - பிரிட்டனுக்கு சட்டவிரோதமாகக் குடிவருபவர்களைத் தடுப்பதற்கான முயற்சிகளில் - முதலாவது திட்டமாக, விரல் அடையாளங்களைப் பதிவுசெய்வது இலங்கையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பலாலி ராணுவத்தளத்தில் விசேட பயிற்சி நடவடிக்கை

விண்ணாணம் விநாசியர்



விசா எடுக்கிறதென்டால் இனிக் குற்றவாளிகள் கணக்காத்தான் குறுகி நிக்கவேணுமோ...?

## அமெரிக்க அதிகாரிகள் முன்னிலையில் நடந்தது

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பலாலிப் படைத்தளத்தில் விசேட பயிற்சி நடவடிக்கை ஒன்று நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளின் முன்னிலையில் நடைபெற்ற இவ்விசேட பயிற்சி நடவடிக்கையில், பல நூற்றுக்கணக்கான படையினர் பங்குபற்றியிருப்பதாகத் தெரிய வருகிறது.**

நேற்றுக்காலை ஆரம்பமாகிய இவ்விசேட பயிற்சி நடவடிக்கை நண்பகல்வரை நீடித்தது.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த இரு அமெரிக்க இராணுவ அதிகாரிகளும், இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் சிலரும், இப்பயிற்சி நடவடிக்கையை நேரில் அவதானித்தனர்.

மிகவும் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பான சூழலிலும், மிக இரகசியமாகவும் நடத்தப்பட்ட இப்பயிற்சி நடவடிக்கைகளுக்காக இராணுவத் (10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி வந்த ஜோன் வெஸ்பேர்க் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்!

(கிளிநொச்சி)

இலங்கைக்கான நோர்வே நாட்டின் விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் - நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றுக்காலை, ஏ-9 கண்டிவீதியூடாக கிளிநொச்சிக்கு வருகைதந்த ஜோன் வெஸ்பேர்க், காலை 10 மணிமுதல் 11.30 மணிவரை விடுதலைப் புலிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டார்.

இதன்போது, வெஸ்பேர்க்குடன் நோர்வே தூதரக இரண்டாவது செயலாளர் தோமஸ் ஸ்ராங்லனும், உடனிருந்தார்.

இச்சந்திப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் (10ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் இருவர் கைது!

வாகரை- காயங்கேணி இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து, விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகரையைச் சேர்ந்த சந்திரதாச ஜெயவீர பயஸ், வடிவேலு சந்திரகுமார் என்ற பிரஷாந் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வாழைச்சேனையிலிருந்து காயங்கேணி சோதனைச் சாவடி ஊடாக (10ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டிப்பிறந்த சகோதரிகள் உலகை விட்டே பிரிந்தனர்

சத்திரசிகிச்சை முடிவில் அடுத்தடுத்து நிகழ்ந்த மரணங்கள்



சிகிச்சைக்குமுன் முத்தமிடும் தோழி



எல்லாம் முடிந்தபின் மலர்வளையங்களுடன்...

உலகம் முழுவதையும் தமது பக்கம் திருப்பியிருந்த, ஒட்டிப்பிறந்த ஈரானிய சகோதரிகள், தாம் பிரிவதற்கான அறுவைச்சிகிச்சை நடந்து ஒன்றரை மணிநேரத்தில் - நேற்று இந்த உலகைவிட்டே பிரிந்து சென்றனர்.

சிங்கப்பூரில் - 48 மணிநேரமாக நடந்த சத்திரசிகிச்சை, முடிவுக்கு வந்து சிறிது நேரத்தில் லடான் பிஜானி என்ற சகோதரி முதலில் மரணமானார்.

பின்னர்- ஒன்றரை மணிநேரம் கழித்து இரண்டாவது சகோதரியான லாலே பிஜானி பலியானார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## குரங்குப்பாஞ்சான் விவகாரம்: புலிகள்- இராணுவம் சந்திப்பு!

### இன்று சூனியப் பிரதேசத்தில் நடக்கிறது

(திருகோணமலை)

கிண்ணியா குரங்குப்பாஞ்சான் பகுதியில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலை தொடர்பாக ஆராய்வதற்கு, திருகோணமலையில் - விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பதுமனுக்கும், திருகோணமலை படையதிகாரிகளுக்குமிடையில் இன்று சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் - படைத்தரப்பின் சார்பில் திருமலையிலுள்ள 28 ஆவது இராணுவப்பிரிவின் தளபதி பிரிகேடியர் ஏ.கே.ஜே.செனவிரட்ண கலந்துகொள்ளவுள்ளதாக (10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா, மன்னாரிலும் 'பொங்கு தமிழ்' நிகழ்வு!

(கிளிநொச்சி)

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை வடபகுதியின் ஏனைய மாவட்டங்களிலும் நடாத்துவதற்கு துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலேயே 'பொங்கு தமிழ்' நிகழ்வை மிக்வும் எழுச்சிபூர்வமாக நடாத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல்கட்டமாக வவுனியாவிலும், (10 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரத்தில் சித்தியடைவோர்; யாழ்ப்பாணம் 27 ஆவது இடம்!

### பாரிய வீழ்ச்சி காண்கிறது கல்விநிலை

(மட்டக்களப்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவோர் எண்ணிக்கையில், இலங்கையில் - யாழ்.மாவட்டம் 27 ஆவது இடத்தில் உள்ளது என, வட-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற, பரிசளிப்பு விழாவில் உரையாற்றும்போதே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கையில் முப்பது கல்வி மாவட்டங்கள் உள்ளன. இவற்றில் க.பொ.த.உயர்தரப் பரீட் (10ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சீ -975)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கேள்வி கோரல்**

1) யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1500 மெற்றிக்தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவரிடமிருந்து கோரப்படுகின்றன.

## மாதாந்த கேள்வித் தொகை

| 2003 ஜுலை | 2003 ஆகஸ்ட் | 2003 செப்ரெம்பர் |
|---|---|---|
| 1,500MT | 1,500MT | 15,00MT |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங் களையும் 2003.07.09 ஆம் திகதி தொடக்கம் 2003.07.23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 மணி தொடக் கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வமுள் ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்விவைப்பாக (விலை கேள் முறி Bid Bond) மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01 Mt.) ரூபா நானூறுப்படி (ரூபா 400) செலுத்துதல் வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்தில் உள்ளது.)

3) பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை - தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடி யாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கண்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2003.07.24 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாகச் சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

04) நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

05) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர், ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்தில் உள்ளது)

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/ மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

2003.07.07 (சி-1210)

## அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

# கூட்டுறவு தின விழா பேச்சுப் போட்டி

81 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு - அச்சுவேலி பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம் நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான பேச்சுப் போட்டி பின்வரும் பிரிவுகளின் அடிப்படையில் நடைபெறும். மேற்படி போட்டியில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள், தத்தமது பாடசாலை அதிபரூடாக 15.07.2003 ஆம் திகதிக்கு முன் 'பொதுமுகாமையாளர், அச்சுவேலி - பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கம்' என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

## போட்டி பற்றிய நிபந்தனைகள்

| பிரிவு | ஆண்டு | நேரம் | தலைப்பு |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 5, 6 | 4 - 5 நிமிடம் | 1) 'கூடி வாழ்தல் கோடி நன்மை'<br>2) 'மாணவர்களும் கூட்டு வாழ்வும்' |
| மத்திய பிரிவு | 7,8,9 | 4 - 5 நிமிடம் | 1) 'கணினி யுகத்தில் கூட்டுறவின் பங்கு'<br>2) 'சிறந்த பிரசையின் வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு' |
| மேற்பிரிவு | 10, 11 | 5 - 6 நிமிடம் | 1) 'சமாதான வளர்ச்சிக்கு கூட்டுறவின் பங்கு'<br>2) 'நிலையான அபிவிருத்திக்கு கூட்டுறவின் பங்கு' |
| உயர்பிரிவு | 12 - 13 | 5 - 6 நிமிடம் | 1) 'மனிதனின் தோற்றமும் கூட்டுறவு வாழ்வும்' (வளர்ச்சிப் பங்கு)<br>2) 'பாடசாலைக் கல்வியில் கூட்டுறவின் அவசியம்' |

ஒவ்வொரு பிரிவு சார்ந்த மாணவர்களும் தரப்பட்ட இரு தலைப்புக்களில் ஏதாவது ஒன்று பற்றிப் பேசுதல் வேண்டும்.
நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

பொதுமுகாமையாளர்,
அச்சுவேலி - பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(சி-1211)

# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர் களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடை யவர்கள், தங்களது சுயவிபரமடங்கிய வேண்டுகைகளை 2003.07.20 ஆம் நாளிற்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பணிநிலை :- 01) ஆய உதவியாளர் (ஆண்கள்)
02) ஆய அலுவலர் (ஆண்கள்)

கல்வித் தகைமை:

பணிநிலை 01 : க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்

பணிநிலை 02 : க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

# நடுவப்பணியகம்,
## ஆயப்பகுதி, கிளிநொச்சி.

(சி-1212)

# சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டணியை ஆதரிப்பது பற்றி இன்னும் முடிவில்லை!

## தேசிய ஐக்கிய முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டமைப்பை, ஆதரிப்பதா இல்லையா என்பது பற்றி, ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே, தேசிய ஐக்கிய முன்னணி முடிவுசெய்யும் என்று, அந்தக் கட்சியின் உப தலைவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

முன்னர் - அம்பாறை கரையோர மாவட்டம் வழங்குவது குறித்து ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்தது. அதிகாரப் பரவலாக்குவதையும் ஜே.வி.பி. எதிர்த்து வருகிறது.

ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அதிகாரப் பரவலாக்கல் அத்தியாவசியமாகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

ஜே.வி.பியியின் இவ்வாறான நடவடிக்கையால், வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு பாரிய இழப்பே ஏற்படும். இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டமைப்புப் பற்றி பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகத் தெரிவித்திருந்தபோதும்,

ஜனாதிபதி சந்திரிகா இதுவரை தேசிய ஐக்கிய முன்னணியுடன் எவ்விதப் பேச்சுவார்த்தையையும் நடத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

விரைவில் இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும், அதன்பின்னரே கூட்டமைப்பை ஆதரிப்பது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்.

அதிகாரப் பரவலாக்கலை எதிர்க்கும் நிலைப்பாட்டை, ஜே.வி.பி. தொடர்ந்து கடைப்பிடித்தால், அந்தக் கூட்டமைப்பை அங்கீகரிக்க முடியாது என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பது குறித்து தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் ஹிஸ்புல்லாஹ் மேலும் தெரிவித்தார்.

# புலனாய்வு அதிகாரிகளுக்கு புலிகள் எச்சரிக்கையாம்!

## 'திவயின' பத்திரிகை கூறுகிறது

(கொழும்பு)

இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகளை, உடனடியாகப் பதவிகளைவிட்டு விலகிக்கொள்ளுமாறு, புலிகள் எச்சரிக்கை விடுத்திருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

புலனாய்வு அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டிருக்கும் இந்த அச்சுறுத்தலையடுத்துப் பலர் கொழும்பிலிருந்து தமது இருப்பிடங்களை வேறு பகுதிகளுக்கு இடம்மாற்றுவதாகவும் 'திவயின' மேலும் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

# இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்கள்; பரிந்துரை இன்று பிரதமர் ரணிலிடம்!

## முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பான அரசாங்கத்தின் யோசனைகளில், கிழக்குப் பகுதியில் உள்ள முஸ்லிம்களின் அபிலாஷைகளை உள்ளடக்கிய பரிந்துரைகளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

கிழக்குப் பகுதி முஸ்லிம்களின் அபிலாஷைகளும் இடைக்கால நிர்வாகத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று -

சிறிலங்கா முஸ்லிம் காங்கி ரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டிருந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பை அடுத்து, முஸ்லிம்களின் அபிலாஷைகள் தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறு, அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டிருந்தார்.

இதையடுத்து, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் கட்டளை பீடத்தின் கூட்டம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் - பிரதமரிடம் சமர்ப்பிக்கவுள்ள பரிந்துரைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இந்தப் பரிந்துரைகளை, இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.(01)

# ஆனைவிழுந்தான் குளத்தில் 2000 ஆண்டுக்கு முற்பட்ட உருவச் சிலைகள் மீட்பு!



கண்டெடுக்கப்பட்ட சில சுடுமண் சிற்பங்கள்

(வவுனியா)

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் குளத்துக்கு நீர் வழங்கும் - ஆற்றின் நீர்தேங்கும் பகுதியிலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில், குள அணைக் கட்டுமானத்துக்காக புல்டோசரால் மண் அள்ளப்படுகையில், மண்படையின் மேலிருந்து சுமார் 3 அடி ஆழத்தில் சுடுமண் சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டன.

6 அங்குலம் முதல் ஒன்றரை அடி உயரம் வரையான பெண் உருவச் சிலைகளின் பாகங்களே அங்கு கண்டெடுக்கப்பட்டன.

பெண் உருவச் சிலைகளின் கைகள், மார்பகங்கள், முகம், தாடை, சலங்கை அணிந்த கால்பாதம், தலைகளை இழந்த 6 அங்குல உயர பெண் உருவம், ஆபிரிக்கப் பழங்குடிகளின் சிற்பக்கலையை நினைவூட்டும் 6 அங்குல உயர குடுமியுடனான சுடுமண் சிற்பம் என்பன கண்டெடுக்கப்பட்டவற்றில் ஒரு தொகுதியில் உள்ளதாகத் தெரியவருகிறது.

# யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் மட்டக்களப்பில் புலிகளுடன் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

அகதிகளை எப்படி பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கான அகதி அந்தஸ்து வழங்குவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று,

மட்டக்களப்பு - கரடியனாறு 'தேனகம்' விருந்தினர் விடுதியில்- மட்டக்களப்பு மாவட்ட யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் காலை 9.40 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு - மட்டக்களப்பு மாவட்ட யு.என்.எச்.சி.ஆர். பொறுப்பாளர் டேவிட், பாதுகாப்பு உத்தியோகத்தர் ஊர்வசி பட்டேல் ஆகியோரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் படையணிப் பொறுப்பாளர்கள், தளபதிகள், பிரிவுப் பொறுப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கரும்புலிகளின் முக்கியத்துவத்தால் சமாதான ஒப்பந்தங்கள் உருவாகின!

## மருதங்கேணியில் இளங்குமரன் உரை

(ஆழியவளை)

"தமிழீழப் போராட்ட வரலாற்றில் - சமாதான ஒப்பந்தங்கள் ஏற்பட்டதன் பின்னணியில் - கரும்புலித் தாக்குதல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. 1987 ஆம் ஆண்டு கரும்புலி மில்லரின் தாக்குதலின் பின்னர், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது. கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் மீதான தாக்குதல், ஆனையிறவுப் பெருந்தளத் தாக்குதல் ஆகியவற்றின் பின்னர், தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு, வடமராட்சி கிழக்கு - உடுத்துறையில், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில், சிறப்புரையாற்றிய தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தெரிவித்தார்.

வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவர் மேலும் பேசுகையில் -

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் - வெற்றிப்படிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், எதிரிகளைத் திணறவைப்பதற்கும், அரசியலில் பல திருப்பு முனைகளை ஏற்படுத்துவதற்கும் காரணமாக இருந்தவர்கள் கரும்புலிகள்.

சங்ககால சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் - பதவி மோகத்திற்காக போரில் ஈடுபட்டுள்ளதை நாம் வரலாறுகளினூடாக அறிந்திருக்கின்றோம். ஆனால், இங்கு நடைபெறுகின்ற போர் - சுதந்திரத்திற்காக நடைபெறுகின்ற புனிதப்போர்.

அவர்கள் - கூடிய ஆளணியைப் பயன்படுத்தி போரில் ஈடுபட்டார்கள். ஆனால், எமது தேசியத் தலைவர் குறைந்த ஆளணியைப்படுத்தி - எதிரிப் படைகளையும், அரச தலைமைப்பீடத்தினையும் திணறவைக்கும் கரும்புலிகள் அணியினை உருவாக்கி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றிப் பாதையில் நடத்தி வருகிறார்.

மேலும், போர் நடைபெறும் காலத்திலேயே - மாவீரர்களையும், அவர்களது பெற்றோர்களையும் கௌரவிக்கின்ற நிகழ்வு, தமிழீழப் பிரதேசத்திலேயே நடைபெறுகின்றது. தலைவரின் தீர்க்க சிந்தனையுடனேயே இது முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வகையில் - தமிழீழ விடுதலை போராட்டத்தில் 240 கரும்புலிகள் தங்களது உயிரை தேச மீட்புக்கு விலையாக கொடுத்துள்ளார்கள். இதில், 163 பேர் கடற் கரும்புலிகளாவர்.

எமது விடுதலை இயக்கம் - பல தடவைகள் பாரிய நெருக்கடிகளையும், பல்வேறு அனர்த்தங்களையும் சந்தித்த போதெல்லாம், எமது தேசியத் தலைவரின் மதிநுட்பம் காரணமாக இந்தப் போராட்டமானது சர்வதேசமயப்படுத்தப்பட்டு - பாரிய வளர்ச்சி அடைந்து சுதந்திரத்தைப் பெறும் விளிம்பில் நிற்பதாக அவர் மேலும் கூறினார்.

(122)

# அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தலங்கம வீட்டின் மீது தாக்குதல்!

## பொலிஸார் ஒருவர் படுகாயம்

வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வீட்டின் மீது - நேற்று அதிகாலை கிரனைட் வீசி, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தலங்கமவில் உள்ள வீட்டின் மீதே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் அமைச்சரின் வீட்டில் காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்தார்.

தாக்குதல் நடத்தியவர்களைக் கண்டு பிடிப்பதற்கான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# ஜனாதிபதி சந்திரிகா மீதான கொலைமுயற்சி; பொலிஸ் விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு!

## செய்தி வெளியிட்ட இதழின்மீது நடவடிக்கை எடுக்கப்படலாம்

(கொழும்பு)

ஜனாதிபதியைப் படுகொலை செய்வதற்கு, பொதுஜனஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர் ஒருவர் திட்டமிட்டுள்ளார் என்ற வகையில் - சிங்கள வாரஇதழ் ஒன்றில் வெளியான செய்தி தொடர்பாக, குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை நடாத்தி அறிக்கையை சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கை தொடர்பாக, எத்தகைய சட்டத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட பத்திரிகை நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி ஆராய்ந்து வருவதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருக்கின்றது.

இது குறித்து விசாரணைகள் மேற்கொண்ட புலனாய்வுப் பிரிவினர், குறிப்பிட்ட இந்த பத்திரிகை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் ஆகியோரின் வாக்குமூலங்களையும் பதிவு செய்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ செய்த முறைப்பாட்டை அடுத்தே, குறிப்பிட்ட பத்திரிகைக்கெதிராக இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூரில் முஸ்லிம் சிப்பாய் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்!

மட்டக்களப்பு - ஏறாவூர் ஏ.கே.எம். வீதியில் வைத்து, இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இரவு 8.30 மணியளவில் இச்சம்பவத்தில், 25 வயதுடைய முகம்மது ஹனீபா நசீர் என்பவரே சூட்டுக் காயத்துக்கு இலகானவராவார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி, இதே இடத்தில் வைத்து பொலிஸ் உத்தியோகத்தர் இருவரை சுட்டுக் கொன்றார் என்ற சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இந்த இராணுவச் சிப்பாய், கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இச்சம்பவத்தை அடுத்து, உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர்.

தனிப்பட்ட குரோதம் காரணமாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக, ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதென ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# முதலுதவி சிகிச்சை நிலையம் மருதங்கேணியில் திறப்பு!

திலீபன் மருத்துவமனையின் முதலுதவிச் சிகிச்சை நிலையம், கடந்த புதன்கிழமை மருதங்கேணியில் திறந்து வைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழு செயலாளர் வ.தவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் - மருதங்கேணி பிரதேச செயலாளர் வி.ப. வேலாயுதபிள்ளை, நாடாவை வெட்டி முதலுதவிச் சிகிச்சை நிலையத்தைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் - மங்கள விளக்கினை, வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகனும், தேசியக் கொடியினை, கடற்புலிகளைச் சேர்ந்த கலையரசனும் ஏற்றிவைத்தனர்.

தியாகதீபம் திலீபனின் உருவப்படத்திற்கு, ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துமனைப் பொறுப்பாளர் ஈழவாணி ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வில் - இப்பிரதேசத்தின் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (122)

# பனிக்கட்டித் தொழிற்சாலையைப் புனரமைக்க அனுமதிக்குமாறுகோரி பிரதமருக்கு மகஜர்!

## கடற்தொழிலாளர் சங்க சமாசத் தலைவர் அனுப்பினார்

யாழ்ப்பாணத்திலுள்ள பனிக்கட்டித் தொழிற்சாலையைப் புனரமைப்பதற்கு அனுமதி வழங்கக்கோரி, வடமாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் பிரதமருக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில், சிதைவடைந்தநிலையில் காணப்படும் பனிக்கட்டித் தொழிற்சாலையினைப் புனரமைப்பதற்கு, யாழ்.குடாநாட்டிலுள்ள படை அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துவருகின்றனர்.

இந்தப் பனிக்கட்டித் தொழிற்சாலையினைப் புனரமைப்புச் செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அனுமதிவழங்கியபோதும், வடபகுதி இராணுவ உயரதிகாரிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து பல தரப்புக்களிடமும் முறைப்பாடு செய்த நிலையிலும், எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

எனவே, இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாணும்படியும், பனிக்கட்டித் தொழிற்சாலையினை மீண்டும் புனரமைப்பதற்குப் படைத்தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள முட்டுக்கட்டையை அகற்றும்படியும் கோரியுமே - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணம் நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பியுள்ளார்.

# நாய்களின் நீர்வெறுப்பு நோயை ஒழிக்குமாறு உள்ளூராட்சிமன்றங்களுக்கு ஆலோசனை!

## உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சுற்றுநிருபம்

(கொழும்பு)

நீர்வெறுப்பு நோயை இல்லாதொழிக்க, சகல உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களுக்கும், செயலாளர்களுக்கும் ஆலோசனை வழங்கும்படி - உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் - உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது - இலங்கையில் பல மாகாணங்களில் நீர்வெறுப்பு நோய் பரவுதல் அதிகரித்துவருகின்றது. இந்நிலை தொடருமானால், இது ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாவதற்குச் சாத்தியமுண்டு. இலங்கை போன்ற நாட்டில, நீர்வெறுப்பு நோயை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மிகவும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, நீர்வெறுப்பு நோய்க்குக் காரணியாகவுள்ள கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை முறையாகக் கட்டுப்படுத்துவதற்கு நீர்வெறுப்பு நோய்ச் சட்டத்தையும், நாய்களைப் பதிவுசெய்யும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளையும் அமுல்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

நீர்வெறுப்பு நோய்ச் சட்டத்திலும், நாய்களைப் பதிவுசெய்யும் சட்டத்திலும் இக்கொடிய நோயைக் கட்டுப்படுத்துவதற்கு, உள்ளூராட்சி மன்றங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் விரிவாகச் சட்டரீதியாக்கப்பட்டுள்ளது.

எனவே, இக்கொடிய நோயினால், வருடாவருடம் நாடு இழக்கின்ற பெறுமதி வாய்ந்த பெருநதொகையான உயிர்களைக் காப்பாற்றுதல் சம்பந்தமாகச் சகல உள்ளூராட்சிமன்றத் தலைவர்களும் அறிவூட்டி, அந்தந்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளின் உதவியைப்பெற்று, இந்த நோயை முற்றுமுழுதாக ஒழிப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்கும்படியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில்

# ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் சர்வோதயம் அடிப்படை உதவிகள்!

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில், மீள்குடியேற்றம் நடைபெற்றுள்ள 5 கிராம அலுவலர் பிரிவுகளில், சர்வோதய இயக்கம் அடிப்படை வசதிகளை வழங்கவுள்ளது.

இதன் அடிப்படையில், இப்பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு - கிணறு, மலசலகூடம் அமைத்தல், கோழிவளர்ப்பு, தோட்டச் செய்கைக்கான மரக்கறி விதைகளை வழங்கல், நெற்செய்கைக்கான விதைநெல் வழங்கல் போன்றவற்றைச் சர்வோதய அமைப்பு வழங்கவுள்ளது.

இவ்வுதவி - பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு, வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கே வழங்கப்படவுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### முல்லைத்தீவில் மீண்டும் உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்

(ஆழியவளை)

முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் பணிமனை, கடந்த 12 வருடங்களின் பின்னர், மீண்டும் நேற்று முதல் முல்லைத்தீவில் இயங்க ஆரம்பித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்வு காரணமாக, இப்பணிமனை புதுக்குடியிருப்பில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (122)

### கல்லுவம் சித்திவிநாயகர் உற்சவம்

(நவிண்டில்)

கல்லுவம் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம், நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி திருவூஞ்சல் திருவிழா நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

### வர்ணம் பூசப்பட்டு மெருகூட்டப்படும் போதனா வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் சில சிகிச்சைக் கூடங்கள் - வர்ணம் பூசப்பட்டு, புது மெருகூட்டப்படுகின்றன.

அத்துடன் - 27, 28, 29, 30 ஆகிய வார்ட்டுகளின் நிலங்களுக்கு மாபிள்களும் பதிக்கப்பட்டு வருகின்றன.

# மகனால் தாக்கப்பட்ட தந்தை படுகாயத்துடன் ஆஸ்பத்திரியில்!

(யாழ்ப்பாணம்)

குடிபோதையில் மகனைப் பேசியதால், ஆத்திரமுற்ற மகன் - தந்தையைத் தடியால் தாக்கிய சம்பவம் மானிப்பாயில் இடம்பெற்றுள்ளது. மகன் தாக்கியதில் படுகாயமுற்ற தந்தையான கணபதி தம்புராசா என்பவர், யாழ்.வைத்தியசாலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில், இச்சம்பவம் இடம்பெற்றது. தலையில் படுகாயம் ஏற்பட்டதால், இவர் உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

# புனரமைக்கப்படாதுள்ள வீதியால் பொதுமக்களுக்கு அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், கட்டுடையிலுள்ள மகா சனசமூக நிலையத்துக்கு முன்பாகவுள்ள வீதியின் அரைவாசிப் பகுதி, புனரமைப்புச் செய்யப்பட்டும், மிகுதிப் பகுதி புனரமைப்புச் செய்யப்படாத நிலையிலும் உள்ளது. இந்த வீதியினைத் திருத்துவதற்கு எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததால், மழைகாலங்களில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளனர்.

இவ்வீதியிலுள்ள மதகு ஒன்றும் கடந்த இரண்டு வருடகாலமாக உடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்தக் கிராம மக்கள் - பிளந்த பனை மரங்களை மதகுக்கு மேலே போட்டு, போக்குவரத்தினை மேற்கொள்கின்றனர். மழைகாலங்களில் இந்த வீதியூடாகப் பயணஞ்செய்யும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.


## வாழ்க வளமுடன்




### முதலாவது அகவையில்

பெயர் - அன்ரன் ஜெயக்குமார் அபிஷேக்
முகவரி - செண்யூட், இளவாலை



### முதலாவது அகவையில்



பெயர் - அ.திவ்யன்
முகவரி - கரவெட்டி மத்தி, கரவெட்டி

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்




# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இன்றுமுதல் மீண்டும் இயங்கவுள்ளது!

## கிளினிக் நாட்களும் அறிவிப்பு

(ஆழியவளை)

அக்கராயனில் இயங்கிவந்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, இன்றுமுதல் கிளிநொச்சி நகரில் இயங்கவுள்ளது.

எனவே, இந்த வைத்தியசாலையில் ஏற்கனவே கிளினிக் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு, கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

திங்கட்கிழமைகளில் பெண்நோயியல் சிகிச்சைகளும், செவ்வாய்க்கிழமைகளில் சத்திரசிகிச்சைகளுக்கான கிளினிக்குகளும், புதன்கிழமைகளில் மருத்துவ சிகிச்சையும், வியாழக்கிழமைகளில் சலரோகம், உயர் குருதியமுக்கம் போன்ற நோய்களுக்கும், வெள்ளிக்கிழமைகளில் மகப்பேற்று சிகிச்சைகளும் முதலாம், மூன்றாம் சனிக்கிழமைகளில் குழந்தை மருத்துவ சிகிச்சைகளும், இரண்டாம், நான்காம் சனிக்கிழமைகளில் கண் சிகிச்சையும் இடம்பெறும் என்றும் -

கட்டம் I - வைத்தியசாலையில் வழமைபோல் சிகிச்சைகள் அந்தந்த நாட்களில் நடைபெறும் எனவும், கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்




மாணவர் மலர்

● கீழே தரப்பட்டுள்ள, தோட்டத்தைச் சித்திரிக்கும் படத்திலுள்ள பழங்கள், பூக்கள், பூச்சாடிகள், வண்ணத்துப்பூச்சிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை உரிய கட்டங்களுக் குள் எழுதுக.




● கீழே தரப்பட்டுள்ள பூச்சிகளின் படங்களுக்குரிய பெயர்களைக் கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள பெயர்களிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

பழ ஈ, வண்டு, செதின் பூச்சி, தத்துவெட்டி, தூள்மூட்டுப் பூச்சி அவரை ஈ, வெட்டுக்கிளி.




(1)........... (2)........... (3)............. (4).............


● கீழே கடிகார முகங்கள் காட்டும் நேரங்களைத் தொடர்புபடுத்துக.




**02.00**




**03.30**



**07.05**



**01.45**



**09.25**

● கீழே தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கட்டத்தற்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவுசெய்க.

வெடிக்கும், விதையிருந்து, பஞ்சிலிருந்து, பருத்தி, கம்பளி, விதைகள், காய்கள், பூக்கள், முற்றும்.

உலகிலே வெப்பப் பிரதேசங்களில் வாழும் மக்கள் எப்படியான ஆடைகளை அணிகின் றார்கள். சூரிய வெப்பம் அதிகமுள்ள நாடுகளில் வாழும் மக்கள் (1) .................. ஆடைகளை அணிவர். இலங்கை சூரிய வெப்பம் அதிகமுள்ள நாடு. அதனால், இலங் கையிலே வாழும் நாங்களும் பருத்தி ஆடைகளை அணிகின்றோம். பருத்தி ஆடைகள் பருத்திப் (2) ........................ செய்யப்படுகின்றன. பருத்திச்செடி வெப்பமுள்ள நாடுகளிலே செழித்து வளரும். அதன் கிளைகள் தோறும் (3) ........................ உண்டாகும். அவை வாடிப்போனதும் அவற்றிலிருந்து (4) .................. உண்டாகும். அவை முற்றி வரும்போது, அவற்றுள் மெல்லிய வெண்ணிறப் பஞ்சு இருக்கும். நன்றாக முற்றிய பருத்திக் காய்கள்(5) .............. போது திரளான பஞ்சு வெளியே தோன்றும். அவற்றைப் பறித்துக் கூடையில் இட்டுப் பஞ்சாலைக்கு எடுத்துச்செல்வார்கள்.

● கீழே தரப்பட்டுள்ளவற்றுள் **தொழிற் பெயர்களைத்** தெரிவுசெய்து, அவற்றைச் சுற்றி வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| கட்டில், | குருநாகல், | ஓடுதல், | பாடுதல், |
| பூக்கள், | அடித்தல், | மடல்கள், | கோயில், |
| எழுதுதல், | கடல்கள், | சத்தம், | உண்ணுதல், |
| வெண்மை, | சிரித்தல், | கைப்பு, | சுவை. |

● கீழே தரப்பட்டுள்ள நிகழ்கால வாக்கியங்களை **இறந்தகால** வாக்கியங்களாக மாற்றுக.

1. வாணி விளையாடிக் கொண்டிருக்கிறாள்.

.........................................................................................

2. அவர் நூலகத்திற்குச் செல்கின்றார்.

.........................................................................................

3. மாலன் மேடையில் பேசுகின்றார்.

.........................................................................................

● அடைப்புக்குறிக்குள்ள சொற்களில் பொருத்தமானவற்றைக் கோடிட்ட இடங்களில் எழுதுக.

1. அடை .................... பெய்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. (மலை / மழை)
2. குரங்கின் .................. மிகவும் நீளமானது. (வால் / வாள்)
3. இலங்கையிலே பல ............ புனரமைக்கப்படாமல் இருக்கின்றன. (குலங்கள் / குளங்கள்)
4. சிறுவர்கள் ......................... மண்ணிலிருந்து உருவங்களைச் செய்தார்கள். (கழி / களி)
5. அந்த .................. மிகவும் உயரமானது. (மலை / மழை)

● பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.

1. மூக்குத்திப் பூண்டு - வித்துக்கள் மூலமே இனம் பெருக்குகின்றது. (...........)
2. கோவா குளிர்ச்சியான காலநிலையை விரும்பும் பயிராகும். (...........)
3. சோயாவில் புரதச்சத்து மிகவும் குறைவாகவே உள்ளது. (...........)
4. யூரியா இயற்கை உரமாகும். (...........)
5. செடி போஞ்சி குறைந்த வயதுடைய, விரைவில் முதிர்ச்சியடையும் இனமாகும். (...........)

● "நாம் வகுப்பறைக்குச் சென்றவுடன்" ........... என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல்வேண்டும்.

(1) .........................................................................................
(2) .........................................................................................
(3) .........................................................................................
(4) .........................................................................................
(5) .........................................................................................
(6) .........................................................................................

(தொடரும்...)

## பெற்றோர்களின் கவனத்திற்கு...!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன (பாடத்திட்டத்திற்கு உட்பட்டு அமையும்). வினாக்கள் தயாரிக்கும்போது - மாணவர்களின் வயது, அறிவு, திறன், மனப்பாங்கு என்பன கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நிதானமாகச் சிந்தித்து, அறிவுறுத்தல்களை வாசித்து அதற்கமைய மாணவர்கள் செயற்படும்போது, இப் பரீட்சை கடினமானதாக அமையாது.

மாணவர்களை வற்புறுத்தி, விருப்பின்றிக் கற்பிக்கின்றபோது - மாணவர்கள் மனநோயாளிகளாக மாறக்கூடிய அபாயமும் இருப்பதாகக் கல்வியாளர்கள் எச்சரிக் கின்றார்கள். பிள்ளைகளுக்கு வயதுக்கு மீறிய வினாக்கள் வழங்குவதையும், அவர்கள் மீது சுமக்கமுடியாத கல்விச்சுமைகளை ஏற்றுவதையும் தவிர்க்கவும். இன்றேல்.....!

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

# G.C.E O/L - வரலாறும் சமூகக்கல்வியும்

## தேசப்படம் தொடர்பாக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அதன் விளக்கங்களும்

**தேசப்படமானது - சமூகக்கல்வியும் வரலாறும், புவியியல் எடுக்கும் மாணவர்களுக்கு மிக முக்கிய மானதாகும். சமூகக்கல்வியும் வரலாறும் பாடத்தில், படங்கள் தரப்பட்டு வினாக்கள் கேட்கப்படும்.**


**ஆனால், புவியியல் பாடத்தினைப் பொறுத்தமட்டில் விபரணம் தந்து, மாணவர்களே படத்தினை அமைக்கும் திறனைப் பெற்றிருக்கவேண்டும். மிக இலகுவானமுறையிலே இந்த தேசப்படத்திற்குப் புள்ளிகளைப் பெற்றுக்கொள் வதற்குச் சிலமுறைகள் இங்கு தொகுத்துத் தரப்பட வுள்ளது. அவற்றினை நீங்களும் கடைப்பிடித்தால் நற்பெறு பேறுகளைப் பெறமுடியும்.**


புவி மேற்பரப்பில் காணப்படுகின்ற முப்பரிமாண வடிவில் உள்ள அம்சங்களைப் பொருத்தமானதோர் அளவுத்திட்டத் தின் அடிப்படையிலே இரு பரிமாண வடிவில் வரைகின்ற படமே தேசப்படம் என அழைக்கப்படுகின்றது.

தேசப்படத்தினை வரைகின்றபோது சில முக்கிய அம் சங்களினைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

### (1) திசை

திசையினைக் கருத்திற்கொண்டே தேசப்படத்தினை வரைதல்வேண்டும். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு எனத் திசைகளினை இலகுவாக வகைப்படுத்தலாம். அவற்றினை விட, வடகீழ் காற்பகுதி, தென்மேற் காற்பகுதி, தென்கீழ் காற்பகுதி, வடமேல் காற்பகுதி என்று திசைகளினை அறிந்தே விடைகள் அளிக்க முற்படவேண்டும்.





### (2) அளவுத்திட்டம்

அளவுத்திட்டத்தினை 3 வகைப்படுத்தலாம்.

(அ) பின்ன அளவுத்திட்டம் -
உ - ம் - 1/50000, 1/25000, 1/100000

(ஆ) விகிதாசார அளவுத்திட்டம் -
உ - ம் - 1:50000, 1:25000, 1:100000

(இ) நேர்கோட்டு அளவுத்திட்டம் -
சமவுயரக்கோட்டில் நேர்கோட்டு அளவுத் திட்டமே மிகமுக்கியமானது. வரைகின்ற படத் தில் 1cm ஆனது 1/2 km ஐக் குறிக்கும். எனவே, 2cm ஆனது 1km ஆக உண்மையான நிலப் பரப்பினில் காணப்படும்.



1:50000

பரீட்சைக்குப் பூர்த்திசெய்யப்படாத நேர்கோட்டினைத் தந்து, பூர்த்திசெய்யச் சொன்னால் (1:50000), மேலே உள்ளது போன்று பூர்த்திசெய்து கொள்ளுதல் வேண்டும். பரீட்சை யினைப் பொறுத்தமட்டில், 1:50000 அளவுத்திட்டத்திலே கேட்கப்படுகின்றது. படத்தில் 7cm உடைய ஒரு வீதி காணப்பட்டால், அது அளவுத்திட்டத்தின்படி 31/2 km ஐக் குறிக்கும்.


### (3) பௌதீக பண்பாட்டு அம்சங்கள்

இதனை நாம் அவற்றினை வேறுபடுத்தி நோக்குவோமே யானால்,

#### (அ) பௌதீக அம்சங்கள்

பௌதீக அம்சங்களுள் மலைத்தொடர் (பிரதான மலைத் தொடர், சிறிய மலைதொடர்) பள்ளத்தாக்கு, சுவடு, மேட்டுநிலம், கூம்புக்குன்று, குழிவுச்சாய்வு, குத்துச்சாய்வு, குவிவுச்சாய்வு, மென்சாய்வு, தொடரலை நிலம் போன்றவற்றினை முக்கியமாகக் குறிப்பிடலாம். இவற்றினைத் தரப்பட்ட படத்தில் இனங்காணும் திறமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
*உதாரணமாக.*

##### I. பள்ளதாக்கும் சுவடும்





மேலுள்ள படத்தில் x-y என்பது பள்ளத்தாக்காகும். அதாவது, சமவுயரக்கோடுகள் உயரத்தினை நோக்கி வளைந்திருக்கும் தன்மையினைக் கொண்டிருக்கும்.

ஆனால், படத்தில் A-B என்பது சுவடாகும். பள்ளத் தாக்கிற்கு எதிர்மாறான அமைப்பில் காணப்படும். அதாவது, தாழ்பிரதேசத்தினை நோக்கிச் சமவுயரக்கோடுகள் வளைந் திருக்கும்.

எல்லா மாணவர்களும் சாய்வுகளில் பிழைவிடுவது காணக் கூடியதாகவுள்ளது. அச்சாய்வுகளினை நோக்குமிடத்து

##### II. குத்துச்சாய்வு


'சமவுயரக்கோடுகள் மிக நெருக்கமாக இருக்கும் தன்மை யினைக் கொண்டமைவதுடன், சமவுயரக்கோட்டு இடைவெளிகள் ஒரே அளவுடையதாக இருக்கும்'.
*உதாரணம்:-*



A - B குத்துச்சாய்வு

##### III மென்சாய்வு

மென்சாய்வினை நோக்குமிடத்து, குத்துச்சாய்விற்கு எதிர் மாறான தன்மையினைக் கொண்டிருக்கும். அதாவது, "சமவு யரக்கோடுகள் ஐதாகவும், ஒரே இடைவெளியையும் கொண்டி ருக்கும்".
*உதாரணம்:-*




A - B மென்சாய்வு

மேற்கூறிய இரண்டு சாய்வுகளிற்கும் சமவுயரக்கோட்டு இடைவெளிகள் ஒரே இடைவெளியினைக் கொண்டிருக்கும் என்பதனைக் கவனத்தில் கொள்ளுதல்வேண்டும்.

##### IV. குவிவுச்சாய்வு


குவிவுசாய்வினை எடுத்து நோக்குமிடத்து- "உயரத்தில் சமவுயரக்கோட்டு இடைவெளிகள் ஐதாகவும், உயரம் குறையக் குறைய அதாவது, தாழ்பிரதேசத்தில் அச்சமவுயரக்கோட்டு இடைவெளிகள் நெருக்கமாகவும் அமைந்திருக்கும்".
*உதாரணம்:-*



A - B குவிவுச்சாய்வு

##### V. குழிவுச்சாய்வு

குழிவுச்சாய்வானது - குவிவுச்சாய்வுக்கு எதிர்மாறான தன்மையினைக் கொண்டிருக்கும். அதாவது, "உயரத்தில் சமவுயரக்கோட்டு இடைவெளிகள் நெருக்கமாகவும், தாழ் பிரதேசத்தில் ஐதாகவும் காணப்படும்".
*உதாரணம்:-*



A - B குழிவுச்சாய்வு

இச்சாய்வுகளில் ஒன்றினை இலகுவாக விளங்கிக் கொண்டால், மற்றையதை இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும்.


#### (ஆ) பண்பாட்டு அம்சம்

இப்பண்பாட்டு அம்சங்களுள் உள்ளடக்கப்படுபவை - கட்டடம், வீதிகள், திணைக்களங்கள், எல்லைகள், பயிர்செய்கைகள், தொழிற்சாலைகள் போன்றவற்றினை முக்கியமாகக் குறிப்பிடலாம். இவற்றினை நீங்கள் உரிய நிறத்துடனும், தெளிவாகவும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.


*உதாரணமாக :-*

மாகாண எல்லைக்கு +--+--+-- எனும் குறியீடும் (சிவப்பு நிறம்), மாவட்ட எல்லை மாகாணத்தினைவிட சிறியது என்பதினால் அதற்கு +·+·+·+· (சிவப்பு நிறம்) இக்குறியீடும் பயன்படுத்தி இலகுவாகக் கற்றுக்கொள்ளமுடியும்.

அதேபோன்று பாலம் வரைகின்றபோதும், அதிக மாண வர்கள் பிழைவிடுவதுண்டு. வீதிக்குப் பாலம் போடுவதேயன்றி, ஆற்றுக்குப் பாலம் போடுவதில்லை.




வீதிக்கு எக்காரணம் கொண்டும் தடப்பு வராது போன்று பாலம் அமைக்கவேண்டும்.




சில மாணவர்கள் இவ்வாறு பாலம் அமைத்துவிடுவார்கள். இது ஆற்றுக்கடவையாக அமையும்.

அடுத்து, ஒரு வீதியினுடைய நீளம் எவ்வளவு என்று பரீட்சைக்கு வினா கேட்கப்படும். அதற்கு நீங்கள் மிக தெளிவாகவும், கெட்டித்தனத்துடனும் செயற்படல்வேண்டும். நூல் ஒன்றினைப் பாவித்து அந்த வீதியினை முதலில் அளவிடுங்கள். அதன் பின்னர், அந்த நூல் எத்தனை cm உள்ளது என்று கணக்கிட்டு, இனி அளவுத்திட்டதின்படி அதனை km இல் கொடுத்தல் வேண்டும்.

*உதாரணம்:-*

| | |
|---|---|
| வீதியின் நீளம் | = 16cm |
| அளவுத்திட்டம் | = 1cm = 1/2 km |
| எனவே 16cm | = 16x1/2 |
| | = 8km |

**S.S.சங்கர்**

தொடரும்....

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

### பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

#### பொது அறிவு விடயங்கள்

- இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டுக் கூட் டம் - 2003 ஜுன் மாதம் ஜப்பானியத் தலைநகர் ரோக் கியோவில் நடைபெற்றது.
- இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி ஆராய்தவற்காக, ஜப்பானினால் நியமிக்கப்பட்ட தூதுவர் யசுசி அகாஷி ஆவார்.
- புவி உச்சி மாநாடு, 2001 செப்ரெம்பரில் தென்னாபிரிக்கா டேர்பன் நகரில் நடைபெற்றது. ஐக்கிய அமெரிக்கா கலந்து கொள்ளவில்லை. 1979, 1983 போல இதுவும் தோல்வியில் முடிவுற்றது.
- பொதுநலவாய நாடுகளின் கூட்டம் அண்மையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றது.
- 2002 இல் இலங்கையில் பொலநறுவை, ஹிங்குராங்கொட பகுதிகளில், விண்ணிலிருந்துவரும் பறக்கும் தட்டுக்கள் தென்பட்டதாகக் கூறப்பட்டது.
- அமெரிக்காவில் 2002 ஜுலையில் பரபரப்பை ஏற்படுத்தியது போலி **World Com** மோசடியாகும்.
- விண்வெளியில் ஏற்பட்டுள்ள முக்கிய அதிர்ச்சி நிகழ்வு- **Joo2E3** எனப் பெயரிட்ட விண்குப்பைகள் ஆகும். இவை தற்போது ஓர் சுற்று வட்டத்தில் செல்கின்றன. எனினும், இவை தொடர்பாகப் பூமிக்கு எதிர்காலத்தில் அச்சுறுத்தல் ஏற்படலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
- வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்து மக்களை மீளக்குடி யமர்த்தல், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர் களின் நலன்களைப்பேணல், இடம்பெயர்ந்த மக்களுக்குச் சுயதொழில் வாய்ப்புக்களை வழங்கல் ஆகிய மூன்று இலக்குகளைச் செயற்படுத்த சிறான் அமைப்பு ஏற்படுத் தப்பட்டது.
- 2001 க.பொ.த. உயர்தரப் பரீட்சையிலிருந்து மாணவர் கள் பெறுபேறு மற்றும் நிலைகளைச் சர்வதேச தரத் துக்கு மாற்றும் நோக்குடன் **Z-Score** என்னும் புதியமுறை அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்கீழ் பல்கலைக்கழக அனு மதியும் நடைபெறுகிறது.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை மட்டக் கணிப் பீடு (SBA) புள்ளிகள், 2002 ஆம் ஆண்டு முதல் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கும், 2005 ஆண்டுமுதல் க. பொ.த. உயர்தரப் பரீட்சைக்கும் சேர்க்கப்படுகின்றன.
- தற்போது இலங்கையில் உள்ளூர் சாதாரண தபால் கட்டணம் ரூ.4.50 ஆகவும், பதிவுத்தபால் கட்டணம் ரூ.16.50 ஆகவும் உள்ளன.
- இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைபப தற்காக 18 ஆவது, 19 ஆவது அரசியலமைப்புச் சீர் திருத்தங்கள் கொண்டுவரப்பட இருந்தன.
- தெற்காசிய பிராந்திய நாடுகளின் கூட்டமைப்பான 12 ஆவது சார்க் உச்சி மாநாடு, 2002 டிசம்பரில் பாகிஸ்தானில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டு, பின்னர் பிற்போடப்பட்டது.
- கிரிக்கெட்டில நைட் பட்டம் பெற்றவர்களாக - கரி சோபர்ஸ், ஜக் ரோர்பன், ஹரல்ட் லாவூட், லென் ஹடன், டொன் பிரட்மன், விவியன் ரிச்சட்ர்ஸ் விளங்குகின்றனர்.
- இனவெறிக்கு எதிரான ஐ.நாவின் முதலாவது மாநாடு - தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் 2001 செப்ரெம்பரில் நடைபெற்றது.

**P.உமாசங்கர்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு*
*ஐந்துடன் மாண்டது அமைச்சு.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## சாக்கடையாகும் அரசியல் !

நாடாளுமன்றம் என்பது - நாட்டு மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வோரின் அவையாக மட்டுமல்லாது - கௌரவமும், மதிப்பும் மிக்கதோர் நாட்டின் அடையாளமாகவும் பேணப்பட்டுவருவதே உலகந்தழுவிய மரபாகும்.

ஒவ்வொரு நாட்டுக்கும் விஜயம் செய்யும் வெளிநாடுகளின் உயர்தலைவர்கள் - தாம் விஜயம் செய்யும் நாட்டின் நாடாளுமன்றில் உரையாற்றுவதை, தமக்களிக்கப்படும் மிகப்பெரும் மரியாதையென எண்ணுவதும் வழக்கம்.

நாடாளுமன்றில் உரையாற்றும்போது - அது அந்த நாட்டுமக்களுக்கே உரையாற்றுவதற்கு ஒப்பானதாகும் என சிலாகிக்கப்படுவதும் உண்டு.

இவ்வாறு கண்ணியம் மிக்கதொரு அவையெனப் போற்றப்படும் நாடாளுமன்றங்கள் இருக்க, இலங்கையின் நாடாளுமன்றத்தில் அண்மைக்காலமாக நடந்துவரும் செயல்கள் - நாடாளுமன்றங்களின் கௌரவத்திற்கே இழுக்கைத்தரும் வண்ணமாக, இலங்கையின் மக்களவையை இடம்பிடிக்கச் செய்துவருகின்றன.

இலங்கை நாடாளுமன்றின் ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியும், எதிர்க்கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் - நாடாளுமன்றத்தில் தங்கள் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் எடுத்துச் சொல்வதையும் கடந்து - நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் கட்டுப்பாடுகளையும் மீறி, மலர்வளையங்களும், சவப்பெட்டிகளும் ஆளுக்காள் வைத்துக்கொள்ளும் அவலநிலைக்காளாக்கி வருகின்றன.

நாடாளுமன்ற ஒழுக்க விதிகளின் வரையறைக்குள், உரிய கருத்துச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்ற நிலையில் - வெளிப்படையான விமர்சனங்களும், பகிரங்கமான விவாதங்களும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றபோது - 'மரண அச்சுறுத்தலை' வெளிப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு மலர்வளையங்களும், சவப்பெட்டிகளும் நாடாளுமன்றில் உள்நுழைவதென்பது - தெற்கின் அரசியல், பலவகையிலும் பலபடிகள் கீழிறங்கிச் சென்றுகொண்டிருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

உண்மையில் - தெற்கின் ஒட்டுமொத்த அரசியல் கலாசாரம் எந்தளவுக்குத் தரமிறங்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதற்கான, சிறப்பானதொரு அடையாளமாக நாடாளுமன்றச் செயற்பாடுகள் அமைந்துவருகின்றன.

நாடாளுமன்றில் உரையாற்றும்போதும் சரி, காரசார விவாதங்களை முன்வைக்கும்போதும் சரி - வார்த்தைகளிலும், சொல்லாடல்களிலும் உரிய பண்பைப் பின்பற்றாதபோது - அவை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுவதும், வரம்பு மீறினால் - நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகரினால் கண்டிக்கப்படுவதும், அதன் எல்லையையும் கடக்குமிடத்து - சபைக் காவலர்களால் குறிப்பிட்ட விதண்டாவாத உறுப்பினர்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவதுமாக - நாடாளுமன்றில் ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருவதை அனைவருமே அறிவர்.

நாடாளுமன்ற அமைப்பின் இந்த சீரிய பண்புகளை வைத்தே - பல நாடுகளிலும் மாணவர்கள் மட்டத்தில் கூட, 'மாணவர் நாடாளுமன்றங்கள' மாதிரியாக உருவாக்கப்பட்டு - அவற்றில் மாணவர்கள் பங்கெடுக்கவும், பேசவும், விவாதங்களில் ஈடுபடவுமென ஆரோக்கியமான அறிமுகங்களும், செயலாற்றுகைகளும் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான சூழலில் - இலங்கை நாடாளுமன்றத்தில் நடைபெறுவது போன்ற செயல்கள், இளைய சமுதாயத்துக்கு எத்தகைய முன்மாதிரியை வழங்கப்போகின்றன என்பது கேள்விக்குரியதாகும்.

ஏற்கனவே - இனவிரோதத்தைத் தூண்டவும், பௌத்த சிங்களப் பேரினவாதத்தை வளர்க்கவும் முக்கிய நிலைக்களனாக இருந்த நாடாளுமன்றம் - இன்று ஒழுங்கீனத்தையும் கற்றுத்தர ஆரம்பித்திருப்பது புதுமையானதொன்றல்ல என்றாலும் -

தென்னிலங்கை அரசியல் - கட்சி மாறிகளினதும், குடும்ப ஆதிக்கத்தினதும், பாதாள உலகத்தோடு தொடர்புடையதும், ரௌடித்தனம் நிரம்பியதுமான சாக்கடை நிலைக்கு 'வளர்ந்து வருவதை' வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்வதாகத்தான் - நாடாளுமன்றில் பிரதிபலிப்புக்கள் தெரிய ஆரம்பித்திருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அதேவேளை - நேற்று முன்தினம், நாடாளுமன்றுக்கு சபாநாயகரின் விசேட பணிப்பின் பேரில் பொலிஸ் மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டு - உயிராபத்து விளைவிக்கக்கூடிய, நாடாளுமன்ற சட்டவிதிகளுக்குப் புறம்பான பொருட்கள் ஏதேனும் பதுக்கிவைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய - நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட அலுமாரிகள்கூட சோதிக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருப்பது - இந்த 'வளர்ச்சியை' இன்னும் உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்திலிருந்து சில காட்சிகள்.

# நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஆரம்பித்தால் கண்காணிப்புக் குழுவே முழுப் பொறுப்பு

## கலபல்ல சந்திர தேரர் ஆர்ப்பாட்டத்தில் பேச்சு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை நாட்டைவிட்டு வெளியேறக்கோரி, நேற்றுமுன்தினம் கொழும்பில் தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பல்வேறு பௌத்த சங்கங்களைச் சேர்ந்த பிக்குகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர். புறக்கோட்டையில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமை அலுவலகத்தைச் சென்றடைந்து, அங்கிருந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உப தலைவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கியவர்களுள் ஒருவரான வண. கலபல்ல சந்திர தேரர், இந்த ஆர்ப்பாட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது, இலங்கையில் கடமையாற்றுகின்ற வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களைக் கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, விடுதலைப் புலிகளுக்குச் சாதகமானகச் செயற்பட்டுவருவதாக குற்றஞ்சாட்டினார். இதனால் இவர்கள் இந்த நாட்டைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது, விடுதலைப் புலிகள் சுமார் மூவாயிரம் தடவைகள் போர்நிறுத்த மீறல்களை மேற்கொள்வதற்கு அனுசரணையாக இருந்திருக்கின்றது.

எனவே, இந்த ஆர்ப்பாட்டம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முதலும் கடைசியுமான எச்சரிக்கையாகுமென கலபல்ல சந்திர தேரர் மேலும் தெரிவித்தார்.

மீண்டுமொரு யுத்தம் ஆரம்பித்தால், அதற்கு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவே பொறுப்பேற்க வேண்டும் என்றும், அவ்விதமே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு செயற்பட்டு வருகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

# முப்படைத் தளபதிகள் திருமலைக்கு திடீரென நேற்றுமுன்தினம் விஜயம்!

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தளபதிகளும் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவும் நேற்றுமுன்தினம் திருகோணமலைக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

கிண்ணியா, குரங்குப்பாஞ்சான் பகுதியில் புலிகளுக்கும்-இராணுவத்தினருக்கும் இடையில் எழுந்துள்ள நெருக்கடி நிலையைத் தணிப்பதற்காகவே இவர்கள் திருகோணமலைக்கு விஜயம் செய்ததாக அரசதரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல; கடற்படைத் தளபதி தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா ஆகியோர் நேற்றுமுன்தினம் திருமலையில் - இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது, கிண்ணியா - குரங்குப்பாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு முரணாக முகாம் அமைத்து வருவதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளால் முகாம் அமைக்கப்பட்டு வரும் பகுதி, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி எனவும் - இராணுவம் - முப்படைத் தளபதிகளிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் தெரிவித்தது.

இதேவேளை, மேற்படி முரண்பாடு தொடர்பாக விடுதலைப் புலிகள் கருத்துத் தெரிவிக்கும்போது,

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியபோது - இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட-திருகோணமலை மாவட்டத்திலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் பற்றிய படத்தில், தற்போது பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கின்ற குரங்குப் பாஞ்சான் பகுதி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருப்பதை உறுதிப்படுத்துகின்ற வரைபடங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன், விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி பதுமனையும், அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்கையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதும் தெரிந்ததே.

**கண்ணிவெடிகள் அகற்றுவது தொடர்பாக**

# அமெரிக்க அதிகாரிகளினால் ராணுவத்துக்கு விசேட பயிற்சி!

(யாழ்ப்பாணம்)

இராணுவ அதிகாரிகளுக்கு கண்ணிவெடி அகற்றுவதில் விசேட நிபுணத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான 'றங்கோ'வின் கண்ணிவெடி அகற்றும் நிபுணர்கள் மூலமாகவே, இராணுவத்தினருக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் மேற்படி நிறுவனம், யாழ்ப்பாணத்தில் நேரடியாகத் தனது நிபுணர்களைப் பயன்படுத்தி கண்ணிவெடி அகற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திவந்தது.

எதிர்காலத்தில் இராணுவத்தினருடன் இணைந்து அவர்களுக்குப் பயிற்சி வழங்குவதன் மூலமும், கண்ணிவெடி அகற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்விடயம் தொடர்பாக மேற்படி அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திற்கும் யாழ்.படைத் தலைமை அதிகாரிக்கும் இடையில் நேற்று முக்கிய பேச்சுவார்த்தை நடைபெற்றது.

# புலிகளின் பகுதிக்குள் நடப்பவற்றுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது

## அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறுகிறார்

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடக்கின்ற எந்தச் செயல்களுக்கும் அரசாங்கம் பொறுப்பாளி அல்ல என, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம், கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற பகுதிகளில் நடக்கின்ற செயல்களுக்கும், சட்டபூர்வமற்ற நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்துவதற்கும் மட்டுமே அரசாங்கம் பொறுப்பெனவும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறும் செயல்களில் தாங்கள் தலையிடப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தொடர்ச்சியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் - படைகளையும், பொலிஸ் திணைக்களத்தையும் சேர்ந்த புலனாய்வுச் சேவைகளின் முக்கிய அதிகாரிகளுக்கான பாதுகாப்பைத் தொடர்ந்தும் தக்கவாறு பாதுகாத்துப் பேணி வரும்படி, புலனாய்வுச்சேவைகள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய கொழும்பு மாவட்டத்திற்குரிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே,

தெஹிவளை பாலத்திற்கும் களனிப் பாலத்திற்கும் இடைப்பட்ட கொழும்பு மாநகரத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும், தாங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் பற்றி ஒவ்வொரு திங்கட்கிழமையும் மக்களுக்கு விளக்கிச்சொல்லக்கூடியதான ஒரு நடவடிக்கையைத் தாங்கள் ஆரம்பித்திருப்பதாகவும் - இதற்கென செய்தியாளர் மாநாடுகள் அடிக்கடி நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# உலக அரங்கில் சாதனை வீரனாக திகழவேண்டும் என்பதே என் ஆசை

**வீரதீரச் செயல்களை நடத்திவரும் வன்னியின் மைந்தனும், இணுவில் பாலா வோடையைச் சேர்ந்தவருமான சிவஞான துரை சுதாகரனுடனான ஓர் சந்திப்பு.**

*கேள்வி:-* நீங்கள் துணிகர முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஏதாவது பயிற்சிகளைப் பெற்றிருக்கிறீர்களா? எவ்வாறு இந்த ஆர்வம் ஏற்பட்டது?

*பதில்:-* நான், சிறுவயதிலிருந்தே விளையாட்டுத்துறையில் மிகுந்த ஈடுபாடுகொண்டவன். அத்துடன், உலக விளையாட்டுச் செய்திகளையும் ஆவலுடன் படிப்பவன். இதன் காரணமாக, இத்துறையில் ஆர்வம் இருந்தது. சிறுவயதிலிருந்து முறையாக யோகாசனம் பயின்றதும், எனக்கு ஊக்கம் தர இன்னுமொரு



காரணமாயிற்று.

*கேள்வி:-* உயிரைப் பணயம் வைத்து வீரதீரச் செயல்களைச் செய்கிறீர்கள். உங்கள் இலட்சியம் என்ன?


*பதில்:-* தனிப்பட்டரீதியில் சாதனை நிலை நாட்டி - உலக வீரதீர விளையாட்டு அரங்கில் ஒரு தமிழன், உலகசாதனை வீரனாகத் திகழ வேண்டும் என்பதற்காகவே இதில் ஈடுபாடு காட்டி வருகிறேன்.

*கேள்வி:-* உங்கள் வீரதீர சாகச நிகழ்வுகள் குறித்தும், எதிர்காலத்தில் என்னென்ன சாதனைகளைச் செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள் என்றும் சொல்லமுடியுமா?

*பதில்:-* எனது சாகச நிகழ்வுகளாக - காதினால் லொறியை இழுத்தல், தலைமுடியினால் லொறியை இழுத்தல், நாக்கினால் ஓட்டோவை இழுத்தல், மூக்கினால் வானை இழுத்தல், ஓடும் இருகார்களை இரு கரத்தாலும் இழுத்து நிறுத்துதல், இரு C.D-200 மோட்டார் சைக்கிளை இரு கரத்தாலும் இழுத்து நிறுத்துதல், மோட்டார் சைககிளைக் கழுத்தினால் தூக்குதல், ஆணியின் கூர்முனையை வயிற்றில் வைத்து மறுமுனையால் வாகனத்தைத் தள்ளுதல் போன்ற சாகச நிகழ்வுகளைச் செய்துள்ளேன். இனி மோட்டார் சைக்கிள் நான்கை இழுத்து நிறுத்தவும், இன்னும் பல வித்தியாசமான சாகசங்களையும் செய்யவுள்ளேன்.

*கேள்வி:-* நீங்கள் இலங்கையின் பல பாகங்களிலும், சாகச நிகழ்வுகளை நடத்தியுள்ளீர்கள். அதைப்பற்றிச் சுருக்கமாகக் கூறமுடியுமா?'

*பதில்:-* எனது முதல் சாகச நிகழ்வு, 1997 இல் கிளிநொச்சியில் இடம்பெற்றது. முதலில், எல்வ் கன்ரரை 50M தூரத்துக்குக் காதினால் இழுத்தேன். இதன்பின்னர், 2000 ஆம் ஆண்டில், கிளிநொச்சி அரச அதிபர் ஐயாத்துரை முன்னிலையில் காதினாலும், தலைமுடியினாலும் வாகனத்தை இழுத்தேன். 2001 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு அரச அதிபர் சுந்தரம் முன்னிலையில் காதினாலும், தலைமுடியினாலும் லேடன் லொறியை இழுத்தேன். அத்துடன், ஓடும் இரு மோட்டார் சைக்கிள்களை இழுத்து நிறுத்தினேன். 2002 ஆம் ஆண்டில் வவுனியா அரச அதிபர் கணேஸ் முன்னிலையில் லொறியைத் தலைமுடி, காதினால் இழுத்தேன். நாக்கினால் ஓட்டோவை இழுத்ததுடன், ஓடும் இருகார்களை இழுத்து நிறுத்தினேன். C.D-200 மோட்டார் சைக்கிளொன்றை வாயினால் தூக்கியுள்ளேன். இவ்வாறாக, பல சாகச நிகழ்வுகளை நடத்தியுள்ளேன். 2003 இல்



இணுவில், மானிப்பாய் பகுதிகளிலும், திருகோணமலையில் சில இடங்களிலும் மேற்படி நிகழ்வுகளை நடத்தியுள்ளேன்.

*கேள்வி:-* இந்தச் சாகச நிகழ்வை மேற்கொள்வதற்கு, குறிப்பிட்ட வயது அல்லது பலம் கொண்டவர்களால் மட்டுந்தான் முடியும் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:-* இல்லை. இக்கலையை ஆண்-பெண் இருபாலருமே முழுமையான நம்பிக்கையுடனும், திடமான மனத்துடனும், சீரியான முறையில், யோகாசனம் பயில்பவர்களாகவும் இருப்பார்களாயின், இத்தகைய சாகசங்களை மேற்கொள்ளலாம்.

*கேள்வி:-* இக்கலை வெளியுலகில் அதிகமாகப் பிரபலமாகாததற்குக் காரணம் என்ன?

*பதில்:-* இக்கலையானது, ஒரு தூயகலை மட்டுமன்றி, ஒரு வீரக்கலையும்கூட. இந்தக் கலையைப் பரிபூரணமாகப் பார்த்து, ரசிக்கக்கூடிய பார்வையாளர்களின் ஊக்குவிப்பும், ஊடகங்களின் ஊக்குவிப்பும் தேவை. அதே வேளை - அரச விளையாட்டுத்துறையும் இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டுகொள்ளாததும், அதிக பிரபலம் பெறாததற்குக் காரணமாக இருக்கலாம் என்பது எனது அபிப்பிராயம்.

*கேள்வி:-* உங்கள் முயற்சிகள் வாயிலாக இறுதியாகச் சொல்ல விரும்புவது?

*பதில்:-* இக்கலையினை யாரும் பயிலலாம் என்பதனை மீண்டும் ஒரு தடவை கூறவிரும்புகிறேன். இக்கலையினை நிச்சயமாக நம்பிக்கையுடன் பயிலவேண்டும். ஆரம்பத்திலிருந்து முழுமையாக யோகாசனம் பயில்வோமானால், பூரண மனக்கட்டுப்பாட்டுடன் செயற்படுவோமானால், இக்கலையின்மூலம் சாதனை வீரனாகத் திகழலாம்.

**சந்திப்பு: விஜேந்திரன்**

# நல்லூர் கோட்டப் பாடசாலை சமூகக்கல்வி போட்டி முடிவுகள்

நல்லூர் கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற சமூகக் கல்வி பொதுஅறிவுப்போட்டியில் தெரிவானோரின் விபரம்.

### பாடசாலை வகை I

**தரம் 6-7**

ஜெ.றஜிதா (கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம்), த.தாட்சாயினி (கலட்டி மெ.மி.த.க.பாடசாலை), அ.பிரதீஸன் (கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), சி.அஜந்தா (அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை), அ.மேரி அஜந்தா (இளையதம்பி இந்து வித்தியாலயம்)

**தரம் 8-9**

வி.சுஜந்தன் (கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம்), அ.ஆனந்தசேகர் (கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), ந.ரஜீவன் (இளையதம்பி இந்து வித்தியாலயம்), து.சுதாகரன் (இளையதம்பி இந்து வித்தியாலயம்), வ.றமேஸ்குமார் (கொக்குவில் நாமகள் வித்தியாலயம்).

**தரம் 10-11**

வ.சுரேஷ்குமார் (கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), த.விஜயதர்சினி (கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), பா.மயூரன் (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), கோ.லோகேஸ்வரன் (கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), தெ.சுரபி (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்).

### பாடசாலை வகை II

**தரம் 6-7**

இ.கஜந்தன் (கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயம்), கு.யதீஸ்வரன் (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), யோ.துஷ்யந்தி (நல்லூர் இந்து த.பெ.பாடசாலை), ச.மருதா (கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), மு.கஜிதா (உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை)

**தரம் 8-9**

க.ஜனனி (கொக்குவில் ஸ்ரீஞான பண்டிதா வித்தியாலயம்), ந.நாகநந்தினி (செங்குந்தா இந்துக் கல்லூரி), பு.ரஜிதா (செங்குந்தா இந்துக் கல்லூரி), சி.சிவதுசன் (கொக்குவில் ஸ்ரீஞானபண்டிதா வித்தியாலயம்), இ.ரவிச்சந்திரன் (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்).

**தரம் 10-11**

இ.சஞ்சீவன் (கோண்டாவில் இராமகிஷ்ண மகா வித்தியாலயம்), வா.அரிகரன் (கோண்டாவில் இராமகிஷ்ண மகா வித்தியாலயம்), ப.புஷ்பரூபன் (நல்லூர் இந்து த.பெ.பாடசாலை), சு.சுகித்தா (கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலயம்), ச.ஜீவிதன் (செங்குந்தா இந்துக் கல்லூரி).

**தரம் 12-13**

க.தேனகா (கோண்டாவில் இராமகிஷ்ண மகா வித்தியாலயம்), க.மேகலா (செங்குந்தா இந்துக் கல்லூரி), செ.செந்தூரன் (கோண்டாவில் இராமகிஷ்ண மகா வித்தியாலயம்), ம.கிருஷ்ணகுமார் (செங்குந்தா இந்துக் கல்லூரி), அ.செபஸ்ரியான் (செங்குந்தா இந்துக் கல்லூரி).

### பாடசாலை வகை III

**தரம் 6-7**

பா.தீபிகா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), க.பஞ்சதாசன் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), ச.தபேஸ்னா (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), கு.வினோதன் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), ஞா.தர்சிலன் (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

**தரம் 8-9**

பூ.நிரோஜன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), செ.குணாளினி (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), தே.கோமதி (முத்துத் தம்பி மகா வித்தியாலயம்), ந.துர்க்கா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), ர.பிரதீஷ் (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.),

**தரம் 10-11**

தே.விநாயகமூர்த்தி (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), இ.பிரதீஷ் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), வி.செந்தூரன் (முத்துத் தம்பி மகா வித்தியாலயம்), வா.கைலாசவிஜய் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), க.சிந்துஜா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம.).

**தரம் 12-13**

தி.நவரெத்தினம் (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), ப.ஞானேஸ்வரன் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), ச.கஜேந்திரன் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), ச.சுவப்னா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), ச.கஜேந்திரன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்).

### பாசாலை வகை IV

**தரம் 6-7**

சு.டினேஸ்காந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), சுபேந்திரமுதலி (கொக்குவில் இந்துக் கல்லூரி), அ.சுமங்கலா (இந்து மகளிர் கல்லூரி), க.சாயிகேசன் (யாழ்.இந்துக் கல்லூரி), இ.சௌமியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**தரம் 8-9**

கி.டல்சினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), த.கரிகரன் (யாழ்.இந்துக் கல்லூரி), ம.பிரதீபன் (யாழ்.இந்துக் கல்லூரி), சே.வைகர்த்தனன் (யாழ். இந்துக் கல்லூரி), கி.பிரசாந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம் 10-11**

தா.பிரதீபராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி), ச.விதூசன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.சர்மிலன் (யாழ்.இந்துக் கல்லூரி), க.விஜிகரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கோ.தர்சிகா (யாழ். இந்துமகளிர் கல்லூரி).

**தரம் 12-13**

ம.நிலக்ஷி (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), இ.கவிதா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜெ.ஜெயப்பிரபா (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), எஸ்.நிரூசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.சிவநிருபன் (யாழ்.இந்துக் கல்லூரி).

# கொழும்பு –தூத்துக்குடி கப்பல்சேவை: உடன்பாடு தயாரிப்புப்பணி பூர்த்தி!

தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கும் பணிகள் பூர்த்தியடைநதுள்ளதாக, துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பற்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இந்தப் பயணிகள் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்கக்கூடிய சாத்தியம் உள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. உடன்படிக்கையில் இருநாட்டு அதிகாரிகளும் விரைவில் கையொப்பமிட உள்ளனர் என்றும், கையொப்பம் இடப்பட்டதும் சேவை உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய கப்பற்துறை அமைச்சரை, உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கைக்கு அழைத்துள்ளதாகவும் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கரும்புலிகள் நாள் போட்டியில் பரிசுபெற்றோர் பெயர் விவரம்!

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கில் கரும்புலிகள் நாளையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள், கடந்த சனிக்கிழமை உடுத்துறையில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டன.

பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் - வெற்றிபெற்றவர்களுக்கு, கடற்புலிகளின் விசேட தளபதியால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு-

### பேச்சுப் போட்டி

**ஆரம்பப்பிரிவு**

அ.அனந்தா (செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை), ம.மனோதாஸ் (ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை), ம.மேரிஸ்ரெபிக்கா (செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை)

**இடைநிலைப் பிரிவு**

ந.கம்சியா (மருதங்கேணி இ.த.க. பாடசாலை), சி.கலைமதி (ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம்), த.குணேசன் (உடுத்துறை மகாவித்தியாலயம்)

**மேற்பிரிவு**

செ.நிவாஸ் (மருதங்கேணி இ.த.க. பாடசாலை), நா.கௌதமி ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயம்), த.விஜிதரன் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்).

**உயர்நிலைப்பிரிவு**

த.தெய்வரூபினி (உடுத்துறை மகா வித்தியாலயம்), க.அனுசியா (ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம்).

### கவிதை ஆக்கம்

**மேற்பிரிவு**

ச.ரகுதீஸ் (ஆழியவளை சி.சி. த.க.பாடசாலை), சி.சுதர்சினி (மருதங்கேணி இ.த.க.பாடசாலை), ர.ரோசிகா (உடுத்துறை மகா வித்தியாலயம்).

**உயர்நிலைப்பிரிவு**

த.நிமல்ராஜ் (உடுத்துறை ம.வித்தியாலயம்), பெ.டெலிஸ்டா (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை).

### கட்டுரை

**ஆரம்பப்பிரிவு**

ம.இனித்தா (தாளையடி றோ.க. பாடசாலை), அ.சுகன்யா (செம்பியன்பற்று றோ.க.பாடசாலை), மை. டானிபபிளின் (கட்டைக்காடு றோ.க.பாடசாலை).

**இடைநிலைப்பிரிவு**

செ.தினேஷ்குமார் (மருதங்கேணி இ.த.க. பாடசாலை); ர.மயூரன் (உடுத்துறை மகா வித்தியாலயம்), தி.நிரஞ்சினி (தாளையடி றோ.க.பாடசாலை).

**மேற்பிரிவு**

சி.சக்திவேல் (உடுத்துறை மகா வித்தியாலயம்), பெ.டென்சியானா (வெற்றிலைக்கேணி மகாவித்தியாலயம்), ஜெ.நிரோத் (மருதங்கேணி இ.த.க. பாடசாலை).

**உயர்நிலைப்பிரிவு**

க.சிவரஞ்சன் (ஆழியவளை சி.சி. த.க. பாடசாலை), ஜெ. கஜேந்திரன் (உடுத்துறை மகா வித்தியாலயம்).

கழகங்களுக்கிடையிலான போட்டிகளில்-

### உதைபந்தாட்டம்

உதயசூரியன் விளையாட்டுக் கழகம் (வத்தியான்), அருணோதயா விளையாட்டுக் கழகம், (ஆழியவளை), சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் (தாளையடி). சிறந்த உதைபந்தாட்ட வீரர் சி.சிவறஞ்சன் (உதயசூரியன் விளையாட்டுக் கழகம்).

### வலைப்பந்தாட்டம்

சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் (தாளையடி), சென்பிலிப்புரேரியான் விளையாட்டுக் கழகம் (செம்பியன்பற்று வடக்கு), சிறந்த வீராங்கனை செபஸ்ரினா சுதர்சினி (தாளையடி). (122)

# சூடானில் பயங்கர விமான விபத்து; 115 பயணிகள் உடல்கருகி மரணம்!

(சூடான்)

சூடானில் நேற்று நடந்த பயங்கரமான விமான விபத்தொன்றில், 115 பயணிகள் கொல்லப்பட்டனர்.

சூடான் எயார்வேர்ஸைச் சேர்ந்த, போயிங் 737 விமானமொன்று - செங்கடல் பகுதியிலுள்ள போர்ட் சூடான் என்ற இடத்திலிருந்து தலைநகர் கார்ட்டுமிற்குப் புறப்பட்ட சிறிது நேரத்தில், தரையில் வீழ்ந்து சிதறியது.

விமானம் மேலெழுந்த சில நிமிடங்களில் - இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாக, விமானத்தின் பைலட் அறிவித்ததும், விமான நிலையத்திலிருந்து மூன்றுமைல் தூரத்தில் விமானம் வீழ்ந்து நொருங்கியது.

இயந்திரக் கோளாறுக்காளான விமானத்தை, விமானத்தளம் நோக்கி மீண்டும் திருப்புவதற்கு விமானி முயற்சித்தபோதும், அது கைகூடவில்லை எனத் தெரியவருகின்றது.

விமானத்திலிருந்த 105 பயணிகளும், விமானியுட்பட 10 பணியாளர்களும் இந்த விபத்தில் பலியாகினர். ஒரேயொரு சிறுகுழந்தை மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர்பிழைத்ததாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

விமானம் வீழ்ந்து நொருங்கிய இடத்தில் - மனித உடலங்கள் எரிந்து கொண்டிருந்ததையும், உறவினர்கள் அலறியடித்துக் கொண்டு விரைவதையும் சூடானிய தொலைக்காட்சி ஒலிபரப்பியது.

இந்த விபத்தில் பலியானவர்களில் எழுவர் வெளிநாட்டவர்கள் என்றும், இவர்கள் - இந்தியா, பிரிட்டன், சீனா, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

## பாகிஸ்தான் தூதரகத்தின் மீது ஆப்கான் தலைநகரில் தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில், பாகிஸ்தானின் தூதரகம் நேற்றுத் தாக்கப்பட்டது.

பாகிஸ்தானில் உள்ள ஆப்கானியர்கள், அந்நாட்டு அரசினால் பழிவாங்கப்படுவதாகக் கூறி - இரண்டாவது நாளாக - காபூலிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு முன்னால் நேற்றும் ஆர்ப்பாட்டம் நடந்தபோது - திடீரெனக்கூடிய ஆப்கானியர்கள், பாகிஸ்தான் தூதரகத்தைத் தாக்கினர்.

இதனையடுத்து, தனது தூதரகத்தை உடனடியாக மூடிவிடுவதாக, பாகிஸ்தான் அரசு நேற்றிரவு அறிவித்தது.

இச்சம்பவம் பற்றி - ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாகி - பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிடம் தொலைபேசி வழியாக மன்னிப்புக் கேட்டபோதும், தமது முடிவினை மாற்றப்போவதில்லையென, பாகிஸ்தான் அறிவித்துள்ளது,

தனது நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதாக, ஆப்கான் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்தும்,

இரு நாடுகளின் எல்லைப் புறங்களிலும் இருநாட்டுப் படையினரும் பரஸ்பரம் சிறிய ஆயுதங்களால் சண்டைகளில் ஆங்காங்கே ஈடுபட்டதாலும் - பதற்றம் அதிகரித்திருந்த நிலையில் -

நேற்றைய சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

## அமெரிக்காவில் ஆயுததாரியால் ஐவர் சுட்டுக்கொலை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் மிசிசிப்பி மாகாணத்தில் - ஆயுததாரி ஒருவரின் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர்.

விமானத் தயாரிப்புத் தொழிற்சாலையொன்றில் நடந்த இச்சம்பவத்தில் - தன்னியக்கத் துப்பாக்கி கொண்டு தாக்குதல் நடத்திய ஆயுததாரியும், தொழிற்சாலைப் பாதுகாப்புப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

குறிப்பிட்ட கொலையாளி, உளவியற் தாக்கத்திற்க்ளானதே - இந்தப் படுகொலைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் - அண்மைக்காலமாக இவ்வாறான தாக்குதல்கள் அதிகமாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# அந்நியப்படைகளைத் தூக்கியெறியுங்கள்; சதாம் ஹுசைன் ஈராக் மக்களுக்கு உரை!

## இரண்டாவது ஒலிநாடாவும் வெளியானது

(பக்தாத்)

ஈராக்கிலிருந்து அந்நியப் படைகளைத் தூக்கியெறியுமாறு, அந்நாட்டு மக்களைக் கோரும் வீராவேச உரையொன்றை - ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் விடுத்திருக்கின்றார்.

ஒலிநாடாவில் தெரிவிக்கப்பட்டிருந்த இந்தச் செய்தியை - லெபனான் நாட்டுத் தொலைக்காட்சிச் சேவை ஒன்றும், அரபுலகின் பிரபலமான இன்னுமொரு தொலைக்காட்சிச சேவையான அல்-ஜசீராவும் ஒலிபரப்பின.

'வெற்றி விரைவில் வரும்' என்றும் சதாம் ஹுசைனின் உரையில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

கடந்த நான்காம் திகதி அல்-ஜசீராவில் இத்தகைய உரை ஒன்று ஒலிபரப்பாகிய பின்னர் மீண்டும் இவ்வாறான உரை நேற்றும் ஒலிபரப்பானது குறிப்பிடத்தக்கது.

'ஈராக்கிலுள்ள அமெரிக்கா நிர்வாகமும், அவர்களைப் பின்பற்றுவோரும் ஒதுக்கித் தள்ளப்படுவார்கள்' என்றும் சதாமின் உரையில் தெரிவிக்கப்பட்டது.

பக்தாத்திலுள்ள தமது கிளை நிறுவனத்தின் வாயிலில் - கடித உறையொன்றில் சதாமின் உரையடங்கிய ஒலிப்பதிவு நாடா கிடைக்கப்பெற்றதாக - லெபனான் நாட்டுத் தொலைக்காட்சிச் சேவையான அல்-ஹயாத்தின் செய்தியாளர் தெரிவித்தார்.

ஒருபுறம் உரையும், மறுபுறம் பாடல்களுமாக இந்த ஒலிப்பதிவு நாடா இருந்தாகவும் அவர் கூறினார்.



இதேவேளை- ஈராக்கில் அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் மீதான தாக்குதல்களும் தொடர்ந்து தீவிரம் பெற்றுவருவது தெரிந்ததே.



பக்தாத்தில், ஈராக்கியர்களால் தாக்கப்பட்ட அமெரிக்கப்படைகளின் கவசவாகனமொன்றின் நிலை இது.



செனகலுக்கு விஜயம்செய்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் - அங்கு, முன்னர் அடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்ட கறுப்பின மக்களுடன் உரையாடுகின்றார்.

## ஏரியல் ஷரோனுடனான சந்திப்பை ஒத்திவைத்தார் மஹ்மூட் அப்பாஸ்!

(ரெல்லவில்)

இஸ்ரேலியப் பிரதமர். ஏரியல் ஷரோனுடனான தனது சந்திப்பை பிற்போட்டிருக்கிறார் பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸ்.

பலஸ்தீனத் தரப்பிற்குள் ஏற்பட்டுள்ள உட்பிணக்குகளும் - ஆறாயிரம் பலஸ்தீனர்களைத் தடுத்து வைத்துக்கொண்டு சில நூற்றுக் கணக்கானோரையே விடுவிப்பதாகக் கூறியுள்ள இஸ்ரேலின் அறிவிப்பும்- இந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டமைக்குக் காரணங்கள் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை - இஸ்ரேலின் கிராமப் பகுதியொன்றில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல் ஒன்றில்- இஸ்ரேலியப் பெண்ணொருவர் கொல்லப்பட்டார் என்றும், இத்தாக்குதலை நடத்தியது யாரென இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## சிறுவிளம்பரம்

### மணமகள் தேவை

இரண்டாம் தாரமாக மணப்பெண் தேவை. (கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு) வயது 30 - 40. வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

*தொடர்பு:* விளம்பர இல.16, மே/பா நமது ஈழநாடு. (412)

### தேவை

தனியார் வைத்தியசாலையில் கடமையாற்ற பெண் தேவை. தங்குமிட வசதியுண்டு. (25 - 40 வயதிற கிடைப்பட்டவர்கள், வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.

*தொடர்பு:* விளம்பர இல.15, மே/பா நமது ஈழநாடு. (411)

### சிறுகதை நூல்

"இந்துசமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்" - எஸ்.பி.கிருஷ்ணன். சேலம் என்.ஆர்.அறக்கட்டளையின் இலக்கியப் பரிசு பெற்றது. யாழ்ப்பாணம், சாவகச்சேரியிலும், எல்லாப் புத்தகக் கடைகளிலும் பெறலாம். விலை ரூ.110.00. (408)

நிறஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், மீனா, ஜோதிகா, மணிவண்ணன், நடடித்த

ரிதம்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே) தினசரி இரவு. 8.45 (பு.நே)

THR LORD OF THE RING

(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

12 ஆம் திகதிவரை

விக்ரம், ஜோதிகா, விவேக் நடித்த

தூள்

தினசரி 10.30, 2.30, 6.30.9.30

(சி-1137)

## விற்பனையாளர்கள் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் பான்ஸிக் கடைக்கு விற்பனையாளர்கள் தேவை. சுயவிவரத்துடன் கீழ்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல.17, மே/பா நமது ஈழநாடு. (சி-1223)

## TEACHING HOSPITAL, JAFFNA
## RENOVATION OF C.E.C.B. ENGINEER'S OFFICE

**1. Chairman, Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for Renovation C.E.C.B. Engineer's office and will be closed at 10.00 a.m. on 23/07/2003.**

**Tenders shoule be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna obtainable up to 16/07/2003 on payment of a non-refundable fee of Rs:250/-**

**2. Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of Tenders.**

**3. Tender forms will be issued only to contractors having valid registration in grade M 7 and aboved in the field of Building construction under the institute of construction Training and Development (ICTAD) Criteria and valid membership of National construction contractors. Association of Sri Lanka (NCCASL) .**

**4. Sealed Tenders May be Dispatched either by Registered Post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna, or deposited in the Tender Box kept at the address appearing below, To receive belore the Closing time.**

**5. Tender Documents May be inspected free of charge at the Resident Engineer's office, C.E.C.B., Teaching Hospital, Jaffna.**

**6. For Further details Please Contact A.O.G.H. Jaffna.**

**DR.S. SATHURMUGAM**
**Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(சி-1222)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நூற்றுக்கணக்கில் கரும்புலிகள் கொழும்பில் ஊடுருவிவிட்டனர்!

## அனுரா பண்டாரநாயக்க நாடாளுமன்றில் பேச்சு

(கொழும்பு)

"கொழும்பில் நூற்றுக்கணக்கான கரும்புலி உறுப்பினர்கள் தங்கியுள்ளனர். இவ்வாறு கரும்புலி உறுப்பினர்கள் கொழும்பில் தங்குவதற்கு தற்போதைய அரசே அனுமதி வழங்கியுள்ளது." இவ்வாறு, பொது ஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான விசேட விவாதத்தின் போதே, அனுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளை அரசாங்கம் கைது செய்யாமல், வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கின்றது என்றும், அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை மீது, தாக்குதல் நடாத்துவதே கரும்புலிகளின் நோக்கமாக இருந்து வருவதாகவும் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார். (200)

[illegible] கல்வி நிலையம்
K.K.S றோட் சுன்னாகம்
எமது நிலையத்தில் குறைந்த செலவில் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
* பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள்.
* றோணியோ வேலைகள்.
* Printing (Lazer And Dotmatic, Colour)
* Scanning
* CD Writing(MP3, Audio,Vidio)
* Computer sales and Repairing

### திருமலை குரங்குப்பாஞ்சானில் தொடரும் பதற்றம்

# முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி இரகசியச் சந்திப்பு

(கொழும்பு)

முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர், ஜனாதிபதி சந்திரிகாவை இரகசியமாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த முப்படைத் தளபதிகள் அங்குள்ள குரங்குப்பாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதிய முகாம் அமைக்கப்பட்டுவரும் விடயம் குறித்து ஆராய்ந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக, ஜனாதிபதியிடம் நிலைமைகளை விளக்கிக் கூறவே மேற்படி இரகசியச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

முகாம் அமைக்கப்பட்ட பகுதி தமது கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியென, விடுதலைப் புலிகள் ஏற்கனவே கண்காணிப்புக் குழுவினருக்கு தெரியப்படுத்தி விட்டதாகக் கூறியிருக்கும்போது - இல்லை, அப்பகுதி தமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனப் படையினர் கூறிவருவதால் அங்கு பதற்றநிலை உருவாகியிருப்பது தெரிந்ததே.

### வவுனியா...

அடுத்து மன்னாரிலும் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வவுனியாவில் - யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களும், கல்வியியற் கல்லூரி மாணவர்களும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தவுள்ளனர்.

இதேவேளை - மன்னாரில், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள் இணைந்து நிகழ்வை நடாத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

### விடுதலைப் புலிகள்...

இவர்கள் வந்ததாகவும், இவர்களில் ஒருவர் கைக்குண்டு வைத்திருந்ததாகவும் - இவர்களைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்திய பொலிஸார் தமது அறிக்கையில் தெரிவித்தனர்.

கைதான விடுதலைப்புலிகள் இருவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் ஏ.எஸ்.அப்துல் கபூர் உத்தரவிட்டார்.

### படையினரின் மின்சாரவேலி...

பாடசாலை மைதானத்திற்கு அருகாமையில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் - தமது முகாம் பாதுகாப்பிற்காக, மாணவர்கள் புழங்கிவரும் பாடசாலை மைதானத்திற்கூடாக முட்கம்பிச்சுருள் வேலியை அமைத்து அதற்கு மின்சாரம் பாய்ச்சியிருந்தது இதன் பின்னரே தெரியவந்தது.

இச்சம்பவம் குறித்து சிறுவனின் பெற்றோர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை - இரண்டு வருடத்திற்கு முன்பும் இதேஇடத்தில் படையினரின் மின்சார வேலியில் சிக்கி கெ.சிவயோகலிங்கம் என்ற பொதுமகன் துடிதுடித்துப் பலியானதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (லி,ச)

### ஒட்டிப்பிறந்த சகோதரிகள்...

இவர்கள் மரணமான செய்தியை வெளியிட்ட ர.்.பேல்ஸ் வைத்தியசாலை அதிகாரிகள் தமது ஆழ்ந்த மனவருத்தத்தையும் தெரிவித்தனர்.

இவர்களது மரணம் தொடர்பாகப் பேசிய சத்திரசிகிச்சைக்குத் தலைமை தாங்கிய டொக்டர் பிறேம் குமார் -

சத்திரசிகிச்சை நடந்தபோது இருவரது உடல்களிலிருந்தும் பெருமளவு இரத்தம் வெளியேறியதால்- மரணத்தைத் தடுக்கமுடியாமல் போனதாகக் கூறினார்.

29 வயதான இந்தச் சகோதரிகளைப் பிரிப்பதற்கான சத்திரசிகிச்சையில் - 28 வைத்தியர்களும், 100 மருத்துவ உதவியாளர்களும் ஈடுபட்டிருந்தனர்.

இருவரின் மண்டையோடுகளும் இணைந்திருந்ததால் மில்லிமீற்றர், மில்லிமீற்றராக மிக நிதானமாகவும், பொறுமையாகவும் சத்திரகிசிச்சை செய்யப்பட்டது. இந்த சத்திரசிகிச்சை முடிவடைய முதலில் 48 மணிநேரமாகும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், இறுதியில் அது 53 மணிநேரங்களானது.

இருவரையும் பிரிப்பதான முயற்சியில் - அவர்களது இரத்தச் சுற்றோட்டத்தின் சிக்கல்தன்மை பெரும் தடையாக இருந்தது. எவ்வாறிருந்தாலும் - சத்திரசிகிச்சைக்கு முன்பே சகோதரிகள் இருவரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இருவரையும் பிரித்தே விடுவதென வைத்தியர்கள் முடிவு செய்தனர்.

இதன்போதே முதலில் லடான் பிஜானி - மரணமானார். பின்னர் மற்றவரும் மரணமானார்.

சத்திரசிகிச்சை நடந்த ர.்.பேல்ஸ் ஆஸ்பத்திரி வளாகத்தைச் சூழ ஈரானியர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த போதும் அது பலனளிக்காமல் போனதாக, செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

கண்டெடுக்கப்பட்டது
06.07.2003 அன்று நாவலர் வீதியில் கை செயின் ஒன்று கண்டெடுக்கப்பட்டது தகுந்த ஆதாரத்தைக் காட்டி பெற்றுக்கொள்ளவும்.
புதிய நதியா நகைமாடம்,
103. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-413)

### ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபன திறப்புவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஆயுள் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் யாழ்.கிளையின் திறப்பு விழா, இன்று காலை நடைபெறவுள்ளது.

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ஆர்.வி. கட்டடத்தில் இப்புதிய பணிமனை அமைகின்றது.

### நாடாளுமன்றில் நேற்று நடந்த அமளிதுமளி!

(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடியபோது, அதன் நடவடிக்கைகளை 15 நிமிட நேரத்திற்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா ஒத்திவைத்தார்.

அண்மையில் சபைக்குள் சவப்பெட்டி ஒன்று கொண்டுவந்தமை தொடர்பாகவும், கூட்டம் இடம்பெறாத போது மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைப்பை ஒன்றைக் கொணடுவந்தது தொடர்பாகவும் சபையில் கூச்சல் ஏற்பட்டதையடுத்து சபை ஒத்திவைக்கப்பட்டது.

ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் அலுமாரிகளின் இரண்டு சாவிகளையும் எடுத்துச் சென்றுள்ளதாக, சபாநாயகர் சுட்டிக்காட்டினார். அப்போது நாடாளுமன்ற அமர்வினை 15 நிமிட நேரத்துக்கு ஒத்திவைத்துவிட்டு அலுமாரிகளை சோதனையிட்டு நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று - அமைச்சர்கள் ஏ.எச்.எம் அஸ்வர், மஹிந்த சமரசிங்க ஆகியோர் கேட்டுகொண்டனர்.

இந்தக் கோரிக்கையை தானும் ஆதரிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஒரேமுறையில் எழுந்து பேச முற்பட்டபோது ஏற்பட்ட அமளிதுமளியை அடுத்து, சபை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### பிரிட்டிஷ்...

மாத்திரம் இம்மாத இறுதி முதல் அமுலுக்கு வருவதாகவும் -

ஆறுமாதகால அவதானிப்பின் பின்னர் - இது தொடர்ந்தும் வெற்றியளிக்கும் பட்சத்தில் இதே நடைமுறையை அனைத்து நாடுகளின் பிரஜைகளுக்கும் பிரிட்டன் கட்டாய நடைமுறையாகக் கொண்டுவருமெனவும், அமைச்சா ஹியூக்ஸ் மேலும் தெரிவித்தார்.

பிரிட்டன் புதிதாக திட்டமிட்டிருக்கும் சட்டவிரோத குடியேற்றகாரர்களைக் கட்டுப்படுத்தும் யோசனைகள் - பெரும் மனித உரிமை மீறலுக்குரியவை என, ஐரோப்பிய யூனியனும், மனித உரிமைவாதிகளும் அண்மையில் கண்டனம் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### பலாலி ராணுவத்...

தினரின் பல்வேறு படையணிகளில் இருந்தும், இராணுவத்தினர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவற்றைவிட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக - விசேட அதிரடிப்படையினர் அழைக்கப்பட்டு, பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இப்பயிற்சி நடவடிக்கை தொடர்பான, எந்தத் தகவலையும் யாழ். படைத்தரப்பு வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வரதர் அணி உறுப்பினர் மீது நகரில் வைத்து கத்திவெட்டு

### நேற்றுமாலை நடந்த சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணி உறுப்பினர் ஒருவர், இனந்தெரியாதவர்களின் கத்திவெட்டிற்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமாலை 3.30 மணியளவில், எஸ்.கருணேஸ்வரன் (வயது 29) என்ற வரதர்அணி உறுப்பினரான இவர், யாழ். நகரிலுள்ள வீதி வழியாகச் சைக்கிளில் சென்ற சமயம், சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் இவரைக் கத்தியால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.

இதனால், இவர் கையில் பலத்த காயமடைந்துள்ளார். (12,111)

# புலனாய்வாளர்கள் கொலைகளில் புலிகளுக்கும் கணிசமான பங்கு!

### அமைச்சர் திலக் மாரப்பன கூறுகிறார்

"அண்மையில் நடந்த இராணுவப் புலனாய்வாளர்களின் அநேகமான கொலைகளுடன் விடுதலைப் புலிகளுக்கும் கணிசமான பங்கு உண்டு'' இவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்புத் தொடர்பான விசேட விவாதத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும் போதே, பாதுகாப்பு அமைச்சர் திலக மாரப்பன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாறான கொலைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தும்படிகோரி, கண்காணிப்புக் குழுவிடம் அரசாங்கம் கோரிக்கை முன்வைத்திருப்பதாகவும், விடுதலைப் புலிகளிடம் இவ்விடயம் குறித்து தாம் விசனத்தைத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இவ்வாறான பல சம்பவங்களில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (200, 01)

# யாழில் ஊடக சபை; இன்று முக்கிய கூட்டம்!

யாழ்ப்பாணத்தில் ஊடக சபை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரைப்பட மற்றும் ஊடகத்துறையை யாழ்ப்பாணத்தில் கட்டியமைக்கும் நோக்குடன் இந்த ஊடக சபை அமைக்கப்படவிருக்கின்றது.

இந்தச் சபையை அமைப்பதற்கான அடிப்படைச் சட்ட மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பாக, ஆராயும் கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஆலோசகராக, இங்கிலாந்து "ஸ்கிறிப்ற் நெற்" நிறுவனத்தின் முகாமை இயக்குனர் இஜன் மாஸ்ரர்ஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் 'ஸ்கிறிப்ற் நெற்' நிறுவனத்தில் பயிற்சிபெறும் பயிற்சியாளரும் கலந்துகொள்ளலாம் என்றும் இத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளும் இக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### உயர்தரம்...

சையில் சித்தியடைவோர் எண்ணிக்கையின்படி இவ்வருடம் யாழ்ப்பாண மாவட்டம் 27 ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த வருடத்தில் 28 ஆவது இடத்தில்தான் யாழ்ப்பாணம் இருந்தது.

இதன்மூலம் வட-கிழக்குப் பகுதிகளில் தற்போது கல்வி நிலை மோசமாகப் பாதிப்படைந்து வருவதனை அவதானிக்கலாம்.

இந்தப் பாதிப்புகளுக்கு- நாட்டில் நடைபெற்று வந்த கொடிய யுத்தமும், மாணவர்களிடையே இன்று காணப்படும் தேவையற்ற பொழுது போக்குகளும் முக்கிய காரணங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

### குரங்குப் பாஞ்சான்...

கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் - நேற்றுமுன்தினம் குரங்குப்பாஞ்சான் பிரதேசத்திற்கு விஜயம்செய்து பார்வையிட்ட இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவசனும் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளார்.

இதேவேளை - கிண்ணியா குரங்குப்பாஞ்சான் பகுதியில் புலிகளினால் அமைக்கப்பட்டுள்ள முகாமினை 72 மணித்தியாலத்தினுள் அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்ட பொறுப்பதிகாரி அப்டேல் புர்கான் நேற்றுத் தெரிவித்தார். (04)

### வன்னிவந்த...

பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தொல்காப்பியன், ஜோர்ஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சியில் தங்கியிருக்கும் நோர்வேக் குழுவினர், இன்றே கொழும்பு திரும்புகின்றனர்.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1527 திகதி: 08.07.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | 7 | 2 | 4 | 1 | 3 | 5 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.